29.12.2015

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

இலங்கை அருகே உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

மேலும் இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:- தென்மேற்கு வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து இலங்கை அருகே உள்ளது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் சில இடங்களில் மழைபெய்துள்ளது.

இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை வலுவடைய வாய்ப்பு இல்லை. இன்று (செவ்வாய்க்கிழமை) தென் மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளில் அநேக இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்பு உள்ளது. இதர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழைபெய்யும் என்று கூறினார்.

### ராமேஸ்வரத்தில் கனமழை

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், மண்டபம், பாம்பன் உள்ளிட்ட பகுதிகளில், 2 மணி நேரத்திற்கும் மேலாக கனமழை பெய்து வருகிறது.

கனமழை காரணமாக ராமநாதசுவாமி கோவிலின் உள்ளே மழை நீர் புகுந்துள்ளதால் பக்தர்கள் அவதிக்குள்ளாகினர். நேற்று ராமநாதபுரம் 42.40 மி.மீ, பாம்பன் 38 மி.மீ,பள்ளமோர்குளம் 22 மி.மீ, தீர்த்தாண்டதானம் மற்றும் முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் தலா 7 மி.மீ.,பரமக்குடியில் 3 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

**தென் கடலோர மாவட்டங்களில் இன்று பலத்த மழைக்கு வாய்ப்பு: ஜனவரி வரை மழை நீடிக்கும்**

தமிழகத்தில் ஜனவரி மாதம் வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர். ரமணன் தெரிவித்தார்.

ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி உள்ளிட்ட தென் கடலோர தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் அவர் கூறினார்.

இதுகுறித்து, சென்னையில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை அவர் கூறியதாவது:

மத்திய வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது, திங்கள்கிழமை காலை 8.30 மணியளவில் தென் மேற்கு வங்கக் கடல் பகுதியில் நீடிக்கிறது.

இந்த நிகழ்வின் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்யும். குறிப்பாக, ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது.

சென்னையில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலையைப் பொருத்தவரை, குறைந்தபட்சம் 77 முதல் அதிகபட்சம் 86 டிகிரி ஃபாரன்ஹீட் வரை வெப்பம் நிலவும். அதேநேரத்தில், மாநகரின் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யுவும் வாய்ப்பு உள்ளது.

எச்சரிக்கை: இந்த நிகழ்வின் காரணமாக, தமிழகம், புதுச்சேரி கடல் பகுதிகளில் வடகிழக்கு திசையில் இருந்து மணிக்கு 45 கி.மீ. முதல் 55 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் கடலுக்குள் செல்ல வேண்டும்.

ஜனவரி வரை தொடரும்: தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை காலம் நிறைவு பெற இன்னும் ஒரு சில நாள்களே உள்ளன. அதைத் தொடர்ந்து, குளிர் காலம் தொடங்கவுள்ளது. இருப்பினும், ஜனவரி மாதம் வரை மழை தொடர வாய்ப்பு உள்ளது. ஆனால், தென்மேற்கு, வட கிழக்குப் பருவ மழை காலங்களில் தொடர்ச்சியாக பெய்யும் மழை போல் இருக்காது. மாநிலத்தில் ஒரு சில இடங்களில் விட்டு, விட்டு மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

பதிவான மழை விவரம்: திங்கள்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் அதிகபட்சமாக 70 மி.மீ மழையும், பாம்பனில் 60 மி.மீ மழையும் பதிவானது.

அதற்கு அடுத்தபடியாக, தங்கச்சிமடத்தில் 50 மி.மீ., மண்டபத்தில் 40 மி.மீ, தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம், தூத்துக்குடியில் 30 மி.மீ, பாபநாசத்தில் 20 மி.மீ, கடலாடி, திருச்செந்தூர், சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரத்தில் தலா 10 மி.மீ மழையும் பதிவானது. தமிழகத்தில் தர்மபுரி, திருப்பத்தூரில் குறைந்தபட்சமாக 64 டிகிரி ஃபாரன்ஹீட் அளவு வெப்பம் நிலவியது என்றார் எஸ்.ஆர். ரமணன்.

## "யூரியா உற்பத்தி அதிகரிப்பால் ரூ.10,000 கோடி மானியம் குறையும்'

வரும் 2016-17 நிதி ஆண்டில் யூரியா உற்பத்தியை 2.50 கோடி டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால், மத்திய அரசின் உர மானிய செலவு ரூ.5,000 கோடி முதல் ரூ.10,000 கோடி வரை

குறையும் என, உரத் துறை செயலர் அனுஜ் குமார் பிஷ்னோய் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: இந்தியாவில் ஆண்டுக்கு 2.2 கோடி டன் யூரியா உற்பத்தி செய்யப்படுகிறது. இது, உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் இல்லாததால், 70-80 லட்சம் டன் யூரியா வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டில் முடங்கிக் கிடக்கும் உர ஆலைகளை செயல்பாட்டுக்கு கொண்டு வரவும், புதிய உர ஆலைகளை அமைக்கவும் மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இதையடுத்து, அடுத்த நிதி ஆண்டில் உள்நாட்டில் யூரியா உற்பத்தி 2.50 கோடி டன்னை எட்டும். மேலும், வெளிநாட்டிலிருந்து அதன் இறக்குமதியும் 15-20 லட்சம் டன்னாக குறையும்.

இதனால், மத்திய அரசின் உர மானியச் செலவினம் ரூ.5,000 கோடி முதல் ரூ.10,000 கோடி வரை குறைய வாய்ப்புள்ளது.

உள்நாட்டில் யூரியாவுடன் வேம்பு கலப்பது 100 சதவீதம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதையடுத்து, மகசூல் அதிகரித்துள்ளதுடன் மண் வளமும் பாதுகாக்கப் பட்டுள்ளது என்றார் அவர்.

## எண்ணெய் வித்துகளின் முளைப்புத் திறனை காக்கும் முறை

எண்ணெய் பயிர் வித்துகளின் முளைப்புத் திறனை பாதுகாக்க வேண்டும் என்றால் நன்றாக உலர வைப்பதுதான் (9 சதவீத ஈரப் பதம்) சிறந்த வழி என்று காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை நிலையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து விதை பரிசோதனை அலுவலர் மாயன் வெளியிட்ட அறிக்கை:

விவசாயிகள் பயிர் அறுவடைக்குப் பின் விதைகளை வெயிலில் காயவைத்து சேமித்து வைத்து அடுத்த பருவத்தில் விதைப்பதை

வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த முறையில் நெல், சிறுதானியங்கள், பயிர் வகைகளின் முளைப்புத் திறனை விட மணிலாவின் முளைப்புத் திறன் குறைந்து காணப்படுகிறது. எண்ணெய் பயிர் வித்துகளின் விதைகளை தேவைக்கு அதிகமாக வெயிலில் காய வைப்பதாலும், அதிக ஈரப்பதம் உள்ள இடத்தில் சேமித்து வைப்பதாலும் முளைப்புத் திறன் பாதிக்கப்படுகிறது. அதோடு ஈரப்பதம் அதிகரிப்பால், பூச்சிகள், பூஞ்சாண நோய் தாக்குதலால் பயிர் இழப்பு, உற்பத்தி பெருமளவு பாதிக்கப்படுகிறது.

எனவே எண்ணெய் பயிர் வித்துகளை சேமித்து வைக்கும் விவசாயிகள், விதையின் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் 9 சதவீத ஈரப்பதத்துக்கு குறையாமல் பாதுகாக்கலாம். இந்த நடைமுறைகளை கடைப்பிடித்து எண்ணெய் வித்துகளின் விதைகளை பாதுகாப்பதோடு அவற்றின் முளைப்புத் திறன் சரியாக உள்ளதா என்பதையும் அறிந்து விதைப்பு செய்தால் அதிக மகசூல் பெறலாம். எண்ணெய் வித்துப் பயிர்களில் விதைகளின் முளைப்புத் திறனை அறிய விரும்பும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைக் குவியலில் இருந்து எள் எனில் ஒவ்வொரு விதைக் குவியலில் இருந்தும் 250 கிராமும், மணிலா விதையெனில் 500 கிராமும் எடுத்து பாலித்தீன் பைகளில் போட்டு விண்ணப்பக் கடிதத்தை இணைத்து விதைப் பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்ப வேண்டும். ஒவ்வொரு விதை மாதிரிக்கும் ரூ.30 செலுத்த வேண்டும். பரிசோதனை முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

## கறவை மாடுகளுக்கு மூலிகை மருத்துவம்



மூலிகை மருத்துவத்தின் மூலம் கறவை மாடுகளுக்கு ஏற்படும் மடிவீக்க நோய், வயிறு உப்புசம், கழிச்சல் நோய்களை சரிப்படுத்தலாம் என தஞ்சாவூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மையத் தலைவரும் மரபுசார் மூலிகை வழி கால்நடை மருத்துவப் பயிற்சி, ஆய்வகத் தலைவருமான பேராசிரியர் ந.புண்ணியகோடி தெரிவித்தார்.

மடிவீக்க நோய்: கறவை மாடுகளில் மடிவீக்க நோய் பெரும்பாலும் நுண்கிருமித் தொற்று மூலமாகவே ஏற்படுகிறது. மாட்டின் மடியானது வீக்கமாகவும் கடினத் தன்மையுடனும் வெப்பம் அதிகரித்தும் காணப்படும். பாதிக்கப்பட்ட கால்நடைகளில் பாலானது திரிந்து வெள்ளையாகவோ மஞ்சள் அல்லது ரத்தம் கலந்தோ காணப்படும். மடியினை நன்கு கழுவி சுகாதாரமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு மாட்டுக்குத் தேவைப்படும் மூலிகை, மருத்துவப் பொருள்களாக 250 கிராம சோற்றுக் கற்றாழை, 50 கிராம் மஞ்சள் பொடி, 15 கிராம் அதாவது ஒரு கொட்டைப் பாக்கு அளவு சுண்ணாம்பு ஆகியவை தேவைப்படும்.

மேற்கண்ட பொருள்கள் மூன்றையும் ஆட்டுக்கல் உரலில் இட்டு நன்றாக கெட்டியாக அரைத்து பின் ஒரு கை அளவு எடுத்து நீர் விட்டுக் கரைத்து, நீர்த்த நிலையில் கால்நடையின் மடிப்பகுதி முழுவதும் நன்றாகத் தடவ வேண்டும். நாள் ஒன்றுக்கு 10 முறை மடிவீக்கம் குறையும் வரை குறைந்தது 5 நாள்களுக்குப் பூச வேண்டும். தினமும் புதிதாக மருந்து தயாரித்துக் கொள்ள வேண்டும். வயிறு உப்புசம்: கால்நடைகளில் உப்புசம் அல்லது நுரையோடு கூடிய வயிறு உப்புசம் தீவன மாறுபாடுகளால் ஏற்படக்கூடியது. இது மிக அதிகமான எளிதில் செரிக்கக்கூடிய தானிய வகை உணவு, ஈரமான பசுந்தீவனங்களை உண்பதால் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க ஒரு மாட்டுக்கு வெற்றிலை 10 எண்ணிக்கை, பூண்டு 5 பல், பிரண்டை 10 எண்ணிக்கை, மிளகு 10 எண்ணிக்கை, வெங்காயம் 5 பல், சின்னசீரகம் 10 கிராம், இஞ்சி 100 கிராம், மஞ்சள் தூள் 10 கிராம் ஆகியவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு சிகிச்சை வாய்வழியாக இருக்க வேண்டும். சின்னசீரகம், மிளகை இடித்து, பின்பு மற்ற பொருள்களோடு கலந்து அரைத்து அக்கலவையை 100 கிராம் பனை வெல்லத்துடன் கலந்தபின் சிறுசிறு உருண்டைகளாக பிரித்து, கல் உப்பு தொட்டு மாட்டினுடைய நாக்கின் மேல் அழுத்தமாகத் தடவி ஒரே வேளையில் அனைத்து உருண்டைகளையும் உள்ளே செலுத்த வேண்டும். கழிச்சல்: நீர்த்த துர்நாற்றமுடைய கழிச்சல் மாடுகளுக்கு காணப்படும். வால், பின்னங்கால்களில் சாணக்கறை படிந்து காணப்படும். உடலிலுள்ள நீர்ச் சத்து, தாது உப்புகள் அதிகமாக வெளியேறி கன்றுகள் மாடுகள் சோர்ந்து காணப்படும். இதை சரிப்படுத்த ஒரு மாடுக்கு அல்லது மூன்று கன்றுகளுக்கு சின்ன சீரகம் 10 கிராம், கசகசா 10 கிராம், வெந்தயம் 10 கிராம், மிளகு 5 எண்ணிக்கை, மஞ்சள் 5 கிராம், பெருங்காயம் 5 கிராம் ஆகியவற்றை நன்கு கருகும் வரை வறுத்து அடுத்து நீர்தெளித்து இடித்துக்கொள்ள வேண்டும். மேலும் வெங்காயம் 2 பல், பூண்டு 2 பல்,

கறிவேப்பிலை 10 இலை, பனைவெல்லம் 100 கிராம் ஆகியவற்றை தனியாக நன்கு அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த இரு கலவைகளையும் கலந்து சிறுசிறு உருண்டைகளாக்கி 100 கிராம் கல் உப்பில் தோய்ந்தெடுத்து மாட்டின் நாவின் சொரசொரப்பான மேல்பகுதியில் தேய்த்தவண்ணம் ஒரே வேளையில் உள்ளே செலுத்த வேண்டும்.

இவ்வாறு சிகிச்சை முறைகளை தெரிவித்துள்ள பேராசிரியர் ந.புண்ணியகோடி அவ்வப்போது தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் சிறப்புக் கால்நடை முகாம்களில் முதல் உதவி மூலிகை மருத்துவம் குறித்து தொடர்ந்து கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகளுக்கு விளக்கி வருகிறார்.

## மிளகாய் சாகுபடியில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது எப்படி?



காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிளகாய் பயிரிடும் விவசாயிகள் முறையான பயிர் மேலாண்மையைக் கையாள்வதன் மூலமும், பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் அதிக சாகுபடியைப் பெற முடியும். மிளகாய் செடியைப் பொருத்தவரை வளரும் பருவம், பூக்கும் பருவம்,

காய் விடும் பருவம் என மூன்று பருவத்திலும் பலவிதமான பூச்சிகள் தாக்குகின்றன. இவற்றை முறையான தடுப்பு முறைகள் மூலம் கட்டுப்படுத்தலாம்.

மிளகாயில் பச்சை மிளகாய், பஜ்ஜி மிளகாய், குடை மிளகாய் என்ற மூன்று வகையான மிளகாய் உள்ளது. உணவில் காரத்துக்காகப் பயன்படுத்தப்படும் பச்சை மிளகாய்தான் காஞ்சிபுரம் உள்பட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அதிகம் பயிர் செய்யப்படுகிறது.

இந்த பச்சை மிளகாயை பயிர் செய்வது குறித்து காஞ்சிபுரம் பகுதியைச் சேர்ந்த தோட்டக் கலைத்துறை அலுவலர் ஒருவரிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது: பச்சை மிளகாய் ஆண்டுக்கு மூன்று பருவங்களில் பயிர் செய்யப்படுகிறது. மிளகாய் செடியில் நன்றாக பூ எடுக்க பொட்டாசியம் சல்பேட் 10 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால், பூ நன்றாக விடும். அதேபோல் துளிரும் நன்றாக வரும். நோய் எதிர்ப்புத் தன்மை அதிகம் கிடைக்கும். வளர்ந்து வரும் மிளகாய் செடியில் பலவிதமான பூச்சிகள் தாக்குகின்றன. குறிப்பாக மிளகாயை இலைப்பேன், அசுஉணி, செஞ்சிலந்தி ஆகிய மூன்று வகையான பூச்சிகள் தாக்குகின்றன. இவற்றை முறையான மருந்துகள் தெளித்தும், பொறிகள் அமைத்தும் கட்டுப்படுத்தலாம்.

இலைப்பேன்: இது, இலையில் உள்ள சாற்றை உறிஞ்சும் தன்மை கொண்டது. இதனால் இலை மஞ்சள் நிறமாக மாறும். இப் பூச்சியில் தாக்குதல் காணப்பட்டால் ஒரு ஏக்கருக்கு 50 லிட்டர் தண்ணீரை தெளிப்பான் மூலம் தெளிப்பதால் இலைப்பேன் கொட்டிவிடும். அதிகம் இலைப்பேன் இருந்தால் ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி. டைமீட்டோடேட் 30 இ.சி என்ற மருந்தை கலந்து தெளிக்க வேண்டும்.

அசு உணி: அசு உணி என்ற பூச்சி சாறு உறிஞ்சும் தன்மை கொண்டது. செடிகளில் கருப்பாகப் படிந்திருக்கும். சர்க்கரை போன்ற திரவத்தை

வெளியேற்றும். இந்த பூச்சி தாக்கினால் "மொசைக்' என்ற நோய் உருவாகும். இதனால், இலைகள் சுருங்கும். இந் நோயை தடுக்க மிளகாய் தோட்டத்தில் 5 வரிசைக்கு இடையில் இரு வரிசை மக்காச்சோளம் நட வேண்டும்.

செஞ்சிலந்தி: இப் பூச்சி கண்ணுக்குத் தெரியாது. தொலை நோக்கியால் மட்டுமே பார்க்க முடியும். இப்பூச்சி தாக்கினால் இலை திட்டு, திட்டாக மஞ்சள் நிறமாக மாறும். இப் பூச்சி தாக்குதலால் உண்டாகும் நோயை முரணை நோய் என்பர். இந்நோய் தாக்கினால் மிளகாய் வளைவாக மாறும்.

இப் பூச்சியைக் கட்டுப்படுத்த டைகோபால்ட் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு மி.லி. வீதம் கலந்து ஒரு ஏக்கருக்கு 500 மி.லி. தெளிக்க வேண்டும். நனையும் கந்தகம் ஒரு லிட்டர் தண்ணீரில் 6 கிராம் கலந்தும் தெளிக்கலாம். காய்துளைப்பான் (புரோட்டானிய புழு): இவ்வகை பூச்சி தாக்கினால் காய், தண்டு ஆகியவற்றில் புழுக்கள் துளையிடும். ஆரம்ப நிலையாக இருந்தால், ஒரு ஏக்கருக்கு ஒரு விளக்குப் பொறி வைத்து தாய்ப் பூச்சிகளை அழிக்கலாம். அதேபோல், ஒரு ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சிப் பொறி வைத்தும் அழிக்கலாம். இப்பொறிகள் வைக்கும்போது கீழே தண்ணீரும், அதில் 2 சொட்டுகள் மண்ணெண்ணெயும் விட்டு வைக்க வேண்டும். டிரைக்கோ கிராமா கைலோனா என்ற ஒட்டுண்ணி அட்டைகளை ஒரு ஏக்கருக்கு 12 இடத்தில் கட்டியும் இப் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

அதேபோல் மிளகாய் செடிக்கு அருகில் உளுந்து செடி, பாசிப் பயிறு செடி நட்டால் அதன் மூலம் நன்மை தரும் பூச்சிகள் பெருகி மிளகாய் விளைச்சல் நன்றாக இருக்கும் என்றார் அவர். விவசாயிகள் மிளகாயைப் பயிரிடும்போது வேளாண் அலுவலர்களின் ஆலோசனைப்படி முறையான பயிர் மேலாண்மையை மேற்கொண்டால் அதிக மகசூலைப் பெற முடியும் என்று தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சேவூரில் ரூ.25 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ. 25 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வரத்து குறைந்து மொத்தம் 1,566 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,610 முதல் ரூ. 5,020 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 4,260 முதல் ரூ. 4,480 வரையிலும், மூன்றாவது ரகம் ரூ. 3,160 முதல் ரூ. 3,800 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 25 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

ஏலத்தில், திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 4 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 394 விவசாயிகளும் பங்கேற்றனர்

**கால்நடை உதவி இயக்குநர் நியமனம்**

காஞ்சிபுரம் மணடல கால்நடை உதவி இயக்குநராக முகமது ரபிக் நியமிக்கப்பட்டுள்ளார்.

காஞ்சிபுரம் மண்டல கால்நடை உதவி இயக்குநர் பணியிடத்தை கூடுதல் பொறுப்பாக, சைதாப்பேட்டை நோய் புலனாய்வுப் பிரிவு உதவி இயக்குநர் சரவணன் கவனித்து வந்தார். இந் நிலையில் வேலூர் மாவட்டத்தில் பணிபுரிந்து வந்த முகமது ரபிக் காஞ்சிபுரம் மண்டல கால்நடைத் துறை உதவி இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவர் கடந்த 20-ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டார்.

**பூச்சிக் கொல்லி மருந்து விற்பனை மைய உரிமம்: வேளாண்மை பட்டதாரிகளுக்கே வாய்ப்பு**

வேளாண்மைத் துறை மற்றும் அறிவியல் தொடர்பான பாடங்களில் பட்டம் முடித்தவர்களுக்கு மட்டுமே பூச்சிக் கொல்லி மருந்து விற்பனை மையம் நடத்த உரிமம் வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) ஏ.ரவிச்சந்திரன் தெரிவித்ததாவது: பூச்சிக் கொல்லி மருந்து விற்பனை மையம் நடத்துவோர், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அதற்கான உரிமத்தை புதுப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. இந்நிலையில், பூச்சிக்கொல்லி மருந்து விற்பனையகம் தொடங்குபவர் வேளாண்மைத் துறையில் இளங்கலை பட்டம் (பிஎஸ்சி அக்ரி) முடித்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் பட்டம் பெறவில்லை என்றால், அந்த கடையை நடத்துவோர் பிஎஸ்சி அக்ரி, உயிரி வேதியியல், பயோ டெக்., வேதியியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பிரிவில் ஏதேனும் ஒன்றில் அறிவியல் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இதற்கான சான்றிதழுடன், அரசு கணக்கில் ரூ.300 செலுத்திய ஒப்புகை சீட்டுடன் உரிமம் பெற விண்ணப்பிக்க வேண்டும். உரிமம் புதுப்பித்தல் மற்றும் புதிய உரிமம் பெறுவதற்கு, இனி வரும் நாள்களில் இந்த வழிமுறைகளை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

மேலும், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் போதும் உரிமத்தின் எண் மாறுபடும். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு, அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## பொங்கல் பண்டிகைக்கு தயாராகும் அலங்காநல்லூர் வெல்லம்

பொங்கல் பண்டிகைக்காக மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பகுதியில் வெல்லம் தயாரிப்புப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலக அளவில் பிரபலம். அதே போல, இப்பகுதியில் தயாராகும் வெல்லம், தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. அலங்காநல்லூர், அய்யூர், எர்ரம்பட்டி, கோட்டைமேடு, கொண்டையம்பட்டி, மேலச்சின்னம்பட்டி, வலசை, செம்புகுடிபட்டி உள்பட பல கிராமங்களில் குடிசைத் தொழிலாக வெல்லம் தயாரிக்கப்படுகிறது. மேலும், இங்கு தயாராகும் உருண்டை வெல்லம் தென்மாநிலங்களின் பல பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. குறிப்பாக சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு பிரசாத தயாரிப்புக்காக இங்கிருந்து தான் வெல்லம் செல்கிறது.

கரும்புச் சாற்றை ராட்சத கொப்பரையில் இட்டு காய்ச்சி, வெல்லம் தயாரிக்கப்படுகிறது. பெரும்பாலான விவசாயிகள் உருண்டை வெல்லம் தயாரிப்பில் ஆர்வம் காட்டுகின்றனர். சிலர் அச்சு வெல்லம் தயாரிக்கின்றனர். 30 கிலோ கொண்ட சிப்பங்களாக விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், வெல்ல அரவைக்காக பயிர் செய்யப்படும் கரும்பில் ஒரு ஏக்கருக்கு 50 டன் வரை மகசூல் கிடைப்பது வழக்கம். ஆனால், போதிய பருவமழை இல்லாத காரணத்தால், இந்த ஆண்டு 30 முதல் 40 டன் வரை தான் மகசூல் கிடைத்துள்ளது. மேலும் பிழிதிறனும் குறைந்து விட்டதால், ஒரு டன் கரும்பு அரவை செய்தால் 500 கிலோ வெல்லம் கூட கிடைப்பதில்லை.

வெல்லம் மொத்த விற்பனையில் ஒரு கிலோ ரூ.30 முதல் ரூ.35 வரை விலை போகிறது. கரும்பு பயிர் பராமரிப்பு செலவு, அறுவடை கூலி,

வண்டி வாடகை, தொழிலாளி செலவு உள்பட ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சம் ரூ.80 ஆயிரம் முதல் ரூ.90 ஆயிரம் வரை செலவாகிறது. தற்போது நிலவும் விலையைக் கணக்கிட்டால், ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் மிஞ்சுவது கூட கஷ்டம். அதோடு, கூலி ஆள் கிடைப்பதில்லை என்பதால், வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வந்துள்ள தொழிலாளர்களை அணுக வேண்டியுள்ளது. இது போன்ற காரணங்களால் ஆர்வம் குறைந்து, வெல்லம் உற்பத்தி ஒவ்வோர் ஆண்டும் குறைந்து கொண்டே வருகிறது.

விவசாயிகள் தயாரிக்கும் வெல்லத்துக்கு குறைந்த பட்ச விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும். இல்லையெனில் வெல்லம் தயாரிப்பு தொழில் அழிந்துவிடக் கூடும் என்று அவர்கள் கூறினர்.

## "அட்மா' திட்டத்தில் விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளி

நிலக்கோட்டை வட்டாரத்தில் உள்ள விளாம்பட்டியில் நெல் பயிரில் விவசாயிகளுக்கான பண்ணைப் பள்ளியின் 2ஆவது வகுப்பு விவசாயி சிவக்குமார் வயலில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இப்பண்ணைப் பள்ளிக்கு திண்டுக்கல் வேளாண்மை துணை இயக்குநர் தவமுனி தலைமை வகித்தார். அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளரான நிலக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் மு.முருகன் முன்னிலை வகித்தார். இதில் இயந்திர நடவு மூலம் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பம் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி கூறப்பட்டது. பின்னர் விவசாயிகளுக்கு இயந்திரம் மூலம் நெல் நடவு செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட மேலாளர் ஐ.சிங்கத்துரை மற்றும் அட்மா திட்ட உதவி மேலாளர்கள் ஜெயசுப்பிரமணி, சோபியாபிரேமாஆகியோர் செய்திருந்தனர்.

**காய்கனி, மலர்கள் கண்காட்சி நடந்த பாலைப் பூங்காவை மேலும் மேம்படுத்த முடிவு**

ராமநாதபுரம் அருகே காய்கனி, மலர்கள் கண்காட்சி நடந்த பூங்காவை மேலும் மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அச்சடிப்பிரம்பு கிராமத்தில் அமைந்துள்ள பாலைப்பூங்காவில் இம்மாதம் 25,26,27 ஆகிய தேதிகளில் காய்கனி மற்றும் மலர்கள் நடைபெற்றது. மேலும், சிறுவர்கள் விளையாடி மகிழ விளையாட்டுச் சாதனங்களும் வைக்கப்பட்டிருந்தன.

கிறிஸ்துமஸ், சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களாகவும் இருந்ததால் 3 நாள்களில் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்காட்சியைப் பார்வையிட்டுள்ளதாக தோட்டக் கலைத்துறைத் துணை இயக்குநர் ச.தமிழ்வேந்தன் திங்கள்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியது: பாலைப் பூங்காவில், சிறுவர்கள் விளையாட புதிதாக ரூ.10 லட்சம் மதிப்பில் விளையாட்டு சாதனங்கள் வாங்கவும், ஞாயிற்றுக்கிழமை தோறும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 20-க்கும் மேற்பட்ட சாய்வுக்கல் நாற்காலிகள் அமைக்கப்பட உள்ளன. மக்கள் ஆர்வம் காரணமாக ஆண்டு தோறும் மலர்கள், காய்கனிகள் கண்காட்சி நடத்தப்படும்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மாடித்தோட்டம் அமைக்க விரும்புவோருக்கு, அதற்கான நிழல்வலை அமைக்க 50 சதவிகித மானியமாக ரூ.17,500 வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் முண்டு மிளகாய் 17500 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. இந்த மிளகாயை இடைத் தரகர்களின் குறுக்கீடு

இல்லாமல் விவசாயிகள் விற்க வணிகரீதியிலான அமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது என்றார்.

### ராமநாதபுரத்தில் பலத்த மழை

ராமநாதபுரத்தில் திங்கள்கிழமை அதிகாலை பலத்த மழை பெய்தது.

இந்த மழையால் நகரில் தாழ்வான பகுதிகள் முழுவதும் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. மதுரை மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் ராமநாதபுரம் நகரில் பழைய பேருந்து நிலையம், பாரதிநகர், அரசு மருத்துவமனை சாலை ஆகிய இடங்களில் மழைநீர் குளம் போல் தேங்கி நின்றதால் வாகன ஓட்டிகளும் மிகுந்த சிரமமடைந்தனர்.

மழை அளவு: ராமநாதபுரம் 42.40 மி.மீ, பாம்பன் 38 மி.மீ,பள்ளமோர்குளம் 22 மி.மீ, தீர்த்தாண்டதானம் மற்றும் முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் தலா 7 மி.மீ.,பரமக்குடியில் 3 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

### 58 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள்

அவிநாசி அருகே வேட்டுவபாளையம் ஊராட்சியில் தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

வேட்டுவபாளையம் ஊராட்சி மன்றத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு, ஊராட்சித் தலைவர் சுதா மூர்த்தி தலைமை வகித்தார். கூட்டுறவு சங்கத் தலைவர் வெங்கடாசலம், சுப்பிரமணியம், கால்நடை மருத்துவர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டப்பேரவை உறுப்பினர் ஏ.ஏ.கருப்பசாமி பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் 58 பயனாளிகளுக்கு ரூ.7.42 லட்சம் மதிப்பிலான ஆடுகள் வழங்கப்பட்டன.

## விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.13 கோடி ஒதுக்கீடு

புதுவையில் தொடர் கனமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூ.13 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது.

வடகிழக்குப் பருவ மழையால் புதுவையில் 6,711 ஹெக்டேர் பரப்பளவு விவசாயம் பாதிப்புக்குள்ளானது. சேதமடைந்த பயிர்களுக்கு முதல்வர் என்.ரங்கசாமி நிவாரண தொகையை அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்குவதற்கான விண்ணப்பங்களை வேளாண் துறை உழவர் உதவியகம் மூலம் 07.12.2015 முதல் 16.12.2015 வரை வழங்கியது.

விவசாயிகள் சமர்ப்பித்த விண்ணப்பங்களில் குறிப்பிட்ட பாதிப்புக்குள்ளான வயல்களை வேளாண் துறை அலுவலர்கள் தொடர் விடுமுறை நாள்களிலும் மேற்பார்வையிட்டனர்.

தற்போது நிவாரணத் தொகை வழங்குவதற்கு உரிய பயனாளிகளை கண்டறிந்து, பட்டியல் தயார் செய்யப்படுகிறது. அந்த பட்டியல்கள் இம்மாத இறுதியில் அந்தந்த உழவர் உதவியகத்தில் சமுதாய தணிக்கைக்கு உள்படுத்தப்படும்.

அதன் பிறகு நிவாரணத் தொகை பயனாளிகளின் வங்கி சேமிப்புக் கணக்கில் சேர்க்கப்படும். இதற்காக புதுச்சேரி அரசு ரூ.13 கோடியை ஒதுக்கி அரசாணையை வெளியிட்டுள்ளது என வேளாண்மைத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**ஆறாயிரம் எக்டேரில் நெல்சாகுபடி தீவிரம்: மூன்று ஆண்டுகளுக்கு பின் பழநியில்**

பழநி:கடந்த மூன்று ஆண்டுகளுக்குப்பின் பழநி பகுதியில் நல்ல மழைபெய்து அணைகள், குளங்கள் நிரம்பியுள்ளதால் 6,100 எக்டேரில் நெல் சாகுபடி நடக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் பழநி சுற்றுப்புறப்பகுதிகளில் 5,500 எக்டர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்கின்றனர். கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இல்லாமல் அணைகள், குளங்களில் தண்ணீர் இல்லாததால் ஆயிரம் முதல் இரண்டாயிரம் எக்டர் வரை குறைந்த அளவே நெல் சாகுபடிபணிகள் நடந்தது.இவ்வாண்டு மேற்குதொடர்ச்சி மலைத்தொடர் கொடைக்கானல், பழநியில் நல்ல மழைபெய்து வரதமாநதி அணை, பாலாறு-பொருந்தலாறு அணைகள், குதிரையாறு அணைகள் நிரம்பி உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

இதைப்போலவே குளங்கள் நிரம்பி பாசன வாய்க்கால்களில் தண்ணீர் வரத்துள்ளது. இதன்காரணமாக சம்பா நெல் ரகங்களான கோ ஆர்-50, ஆடுதுறை-49, திருச்சி-1, கர்நாடக பொன்னி நெல் ரகங்களை சாகுபடி செய்வதற்காக விவசாயிகள் வயலை உழுந்து தயார் செய்கின்றனர். பலஇடங்களில் இயந்திர நடவுமுறையிலும் நெல் நாற்றுகள் நடக்கும்பணி நடக்கிறது.

பழநி முதலிடம்பழநி வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன் கூறுகையில்,

""கடந்த ஆண்டு மழை குறைவு காரணமாக நவம்பர், டிசம்பரில் 1100 எக்டர் பரப்பளவில் சம்பா நெல்சாகுபடி நடந்தது. இவ்வாண்டு தற்போது 3,100 எக்டேரில் நெல்சாகுபடி பணிகள் நடக்கிறது. இதில் ரூ.15 லட்சம் செலவில், 1,250 ஏக்கரில் இயந்திர முறையில் நெல்சாகுபடி செய்து மாவட்டத்தில் பழநி முதலிடத்தில் உள்ளது.

**வன துறையினர் சார்பில் 20 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு**

திருத்தணி:வன துறையினர் சார்பில், நேற்று முதல், 20 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிட்டு, அதற்கான பணிகள் துவங்கப்பட்டு உள்ளன.திருத்தணி வன துறை சரகத்துக்குட்பட்ட பகுதிகளில், தற்போது கனமழை பெய்துள்ளது. இதையடுத்து, திருத்தணி வன துறையினர், மரம் வளர்ப்பு திட்டத்தின் கீழ், 20 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில், மரக்கன்றுகள் நடவு செய்யும் பணி, நேற்று அகூர் பகுதியில் துவங்கியது. வனச்சரகர் வாசு, மரக்கன்றுகளை நட்டு துவக்கி வைத்தார்.பின், அவர் கூறுகையில், 'திருத்தணி வனச்சரகத்துக்குட்பட்ட 20 கிராமங்களில், 20 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட உள்ளன. 'புங்கன், வேம்பம், மயில்கொன்றை, நாவல், தேக்கு, பூவரசு, மலைவேம்பு உட்பட, 13 வகையான ரக மரக்கன்றுகள், 25க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நடவு செய்து வருகின்றனர். 10 நாட்களுக்குள் மரக்கன்றுகள் நட்டு முடிக்கப்படும்' என்றார்.

**கால்நடை சிறப்பு சிகிச்சை முகாம்: கோமாரி நோய் முற்றிலும் தடுப்பு**

டி.என்.பாளையம்: கோபி தாலுகா, டி.என்.பாளையம் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில், ஆண்டுதோறும் ஜூன் முதல் டிசம்பர் வரை மழைக் காலங்களில் மாடு, ஆடுகளுக்கு கோமாரி நோய்த் தொற்று ஏற்பட்டு, உயிரிழப்பு அதிகமாகி வந்தது. இதைத் தடுக்க மார்ச், செப்டம்பர்

மாதங்களில் இலவச தடுப்பூசி போடப்பட்டது. மேலும், ஒவ்வொரு மாதமும், டி.என்.பாளையத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கால்நடை சிறப்பு சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாம்களால், கோமாரி நோய் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை மருத்துவத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி**

செஞ்சி: செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில், மகளிர் கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

செஞ்சி தாலுகா, செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் மகளிர் கரும்பு விவசாயிகளுக்கான கள பயிற்சி முகாம் நடந்தது. விரிவாக்க மேலாளர் வெங்கடேச பெருமாள், பயிற்சி அலுவலர் வித்யா, பூச்சியியல் வல்லுனர் கார்த்திக், விரிவாக்க அலுவலர் சதீஷ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் ஆழ் உழவு, விதை கரும்பின் முக்கியத்துவம், சொட்டு நீர் பாசனம், நிழல்வலை மூலம் செதில் பரு நாற்று நடவு, இயற்கை இடுபொருள், உயிர் உரங்கள் உபயோகித்தல், கட்டை கரும்பு சாகுபடி, பூச்சியியல் மேலாண்மை, களைக்கட்டுப்பாடு உள்ளிட்ட தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினர். இதில் 25 மகளிர் கரும்பு விவசாயிகள் பங்கேற்றனர்.

**விதை சுத்திகரிப்பு நிலைய புதிய கட்டடம் திறப்பு**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் விதை சுத்திகரிப்பு நிலையம் மற்றும் விதை சேமிப்பு கிடங்கை முதல்வர் ஜெ., வீடியோ கான்பரன்ஸ் மூலம் திறந்து வைத்தார்.

கள்ளக்குறிச்சி வேளாண் விதை சுத்திகரிப்பு நிலைய அலுவலக வளாகத்தில் 37.50 லட்சம் ரூபாய் மதிப்பில் அரசு விதை சுத்திகரிப்பு நிலையம் மற்றும் விதை சேமிப்பு கிடங்கு கட்டடம் புதியதாக கட்டப்பட்டது. இதனை முதல்வர் ஜெ., வீடியோ கான்பரன்ஸ் மூலம் நேற்று திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து அழகுவேலுபாபு

எம்.எல்.ஏ., தலைமையில், குத்துவிளக்கேற்றி இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். ஒன்றிய சேர்மன் ராஜசேகர் முன்னிலை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் ரத்தினசபாபதி வரவேற்றார்.

விழாவில் சி.எம்.எஸ்., தலைவர் பச்சையாப்பிள்ளை, துணை இயக்குனர்கள் தர்மலிங்கம், செல்வராஜ், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பாபு, மாவட்ட திட்ட குழு உறுப்பினர் அய்யப்பா, ஒன்றிய அவைத் தலைவர் வைத்திலிங்கம், ஒன்றிய துணை சேர்மன் கண்ணன், மாவட்ட கவுன்சிலர் ராயப்பன், விதை சுத்திகரிப்பு நிலைய வேளாண்மை அலுவலர்கள் புஷ்பராணி, வனிதா, வேளாண்மை அலுவலர்கள் பொன்னுராசன், தேவி, நபிஷாபானு, கூட்டுறவு சங்க துணை தலைவர்கள் புண்ணியமூர்த்தி, செந்தில் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விதை சுத்திகரிப்பு நிலையம் ஆய்வு**

குளித்தலை: இனுங்கூரில், 64 லட்சம் ரூபாய் மதிப்பில் விதை சுத்திகரிப்பு நிலையத்தை, கலெக்டர் ஆய்வு செய்தார். கரூர் மாவட்டம், குளித்தலை அடுத்த இனுங்கூரில், 64 லட்சம் ரூபாய் மதிப்பில் புதியதாக கட்டப்பட்ட விதை சுத்திகரிப்பு நிலையத்தை, தமிழக முதல்வர் ஜெயலலிதா, காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதை தொடர்ந்து, கரூர் கலெக்டர் ஜெயந்தி, விதை சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டு, விவசாயிகளுக்கு இனிப்புகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில், குளித்தலை எம்.எல்.ஏ., பாப்பாசுந்தரம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தேனி அருகே சாந்தினி பூ சாகுபடி அமோகம்:கிலோ ரூ.150க்கு விற்பனை**

தேனி;தேனி அருகே பொம்மிநாயக்கன்பட்டியில் செவ்வந்தி ரகத்தை சேர்ந்த சாந்தினி பூ அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது மார்க்கெட்டில் கிலோ ரூ.150க்கு விற்கப்படுகிறது.

மதுரை- தேனி ரோட்டிலுள்ள பொம்மி நாயக்கன்பட்டியில் பல ஏக்கர் பரப்பளவில் செவ்வந்தி ரக சாந்தினி பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மஞ்சள் நிறமுள்ள இப் பூக்கள் மாலைகள் மற்றும் தோரணங்கள் கட்டுவதற்கு பெரிதும் பயன்பட்டு வருகிறது.

குறிப்பாக, சபரிமலை சீசனை முன்னிட்டு இந்த பூக்கள் சாகுபடி செய்வது வழக்கம். கடந்த மாதம் பெய்த தொடர் மழையால், பிற பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த பல ஏக்கர் சாந்தினி பூ செடியிலேயே கருகின. இதனால், விவசாயிகள் பெரிதும் நஷ்டம் அடைந்தனர். இந்நிலையில் சீதோஷண நிலை மாற்றத்தை தொடர்ந்து பொம்மிநாயக்கன்பட்டி பகுதிகளில் மீண்டும் சாந்தினி பூ சாகுபடி களை கட்டியுள்ளது. இதனால், பெரும்பாலான விவசாயிகள் கூலியாட்களை கொண்டு பூ பறிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். ஏக்கருக்கு 10 முதல் 15 மூடைகள் வரை கிடைக்கிறது. கிலோ ரூ. 100 முதல் 150க்கு வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம் உள்ளிட்ட பிற மாவட்ட வியாபாரிகள் இங்கு முகாமிட்டு மொத்தமாக கொள்முதல் செய்து வருகின்றனர்.

குறைந்த தண்ணீர் போதும்: விவசாயி சசிக்குமார் கூறுகையில்,""கடந்த 6 ஆண்டுகளாக சாந்தினி பூ சாகுபடி செய்து வருகிறேன். ஆண்டுதோறும் சபரிமலை சீசனையொட்டி இப்பூக்கள் சாகுபடி செய்வது வழக்கம். மழை பாதிப்பால் பிற பகுதிகளில் செடியிலேயே கருகி பட்டுப்போனது. ஒரு சில இடங்களில் நன்றாக வளர்ந்துள்ளன. குறைந்தளவு தண்ணீர் பாய்ச்சினால் போதும். சாகுபடி நன்றாக கிடைக்கும். ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் முதல் லாபம் கிடைத்து வருகிறது. ஜனவரிக்கு பின் சீசன் முடிந்துவிடும்",என்றார்.

**அட்மா திட்டத்தில் மேலாண்மை முகாம்**

சங்ககிரி: சங்ககிரி வட்டாரத்தில், காவேரிபட்டி கிராமத்தில் வேளாண்மை தொழில் நுட்ப அட்மா திட்டத்தில் மேலாண்மை முகாம் நடந்தது. அட்மா திட்ட தலைவர் பழனிசாமி தலைமை வகித்தார். இதில், இயந்திரம் மூலம் நெல் நடவு குறித்து செயல் விளக்கம் நடத்தப்பட்டது. உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் பற்றியும், கோனோவீடர் பயன்படுத்தி களை எடுக்கும் முறைகளை பற்றி விரிவாக கூறப்பட்டது. வேளாண்மை அலுவலர் (ஓய்வு) சுப்பிரமணியம், வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜெய்கிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண் விரிவாக்க மையம் திறப்பு விழா**

தலைவாசல்: தலைவாசலில், புதிதாக கட்டப்பட்டுள்ள, 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள புதிய வேளாண் விரிவாக்க மையம் திறந்து வைக்கப்பட்டது. தலைவாசல் ஒன்றியத்தில் செயல்பட்டு வந்த வேளாண் அலுவலகத்தில் வசதிகள் குறைவாக இருந்ததால் புதிய அலுவலகம் கட்ட தமிழக அரசு உத்தரவிட்டது. இதற்காக தேசிய வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 2014-15ல், 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. விரைவாக கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டது. தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று மதியம், 12 மணியளவில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் திறந்து வைத்தார். இதையடுத்து, தலைவாசல் ஒன்றிய அட்மா குழு தலைவர் ராமசாமி குத்துவிளக்கேற்றி வைத்தார். வேளாண் உதவி இயக்குனர் ஜானகி உடனிருந்தார். சேமிப்பு கிடங்குகளுடன் கூடிய அனைத்து வசதிகளுடன் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. விரைவில் பழைய அலுவலகத்தில் இருந்து அனைத்தும் மாற்றப்பட்டு புதிய அலுவலகத்தில் செயல்பட துவங்கும்.

**ஆந்திர பழவகை, மலர் செடிகள் பரமக்குடியில் விற்பனை**

பரமக்குடி: பரமக்குடியில் ஆந்திர மாநில பழவகை, மலர் செடிகள், குரோட்டன்ஸ் செடிகள் விற்பனைக்கு வந்துள்ளது.அவற்றை மக்கள் ஆர்வத்துடன் வாங்குகின்றனர்.

ஆந்திர மாநிலத்தில் ஒட்டுரக பழவகை, மலர், குரோட்டன்ஸ் செடிகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை குறுகிய காலத்திலேயே அதிக பலன் தருகிறது. இதனால் அவற்றிற்கு தமிழகத்தில் அமோக வரவேற்பு உள்ளது. தற்போது தமிழகத்தில் செடிகள் நடுவதற்கான சீசன் துவங்கியுள்ளது. இதனால் பழ வகை, மலர் செடிகளை ஆந்திர விவசாயிகள் விற்பனைக்காக பரமக்குடி கொண்டு வந்துள்ளனர். இவற்றில் 6 மாதத்தில் காய்க்கும் ஒட்டுரக எலுமிச்சை, கொய்யா, சப்போட்டா செடிகளை மக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். மேலும் மாடி தோட்டத்திற்காக மல்லிகை, முல்லை, ரோஜா உள்ளிட்ட பூச்செடிகளும் அதிகளவில் விற்பனையாகின்றன. ஆந்திர விவசாயிகள் கூறியதாவது: தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் 5 நாட்கள் தங்கி விற்பனை செய்கிறோம். 100 க்கும் மேற்பட்ட செடி, கொடி ரகங்கள் உள்ளன. முக்கியமாக ஒட்டு ரக எலுமிச்சை போன்ற பழவகை செடிகள் ஒரு அடி உயரம் வளர்ந்ததும் காய்க்க துவங்கும். ஆந்திரா மற்றும் தமிழக மண்வளம் ஒரே சீராக உள்ளதால், இச்செடிகள் எளிதில் வளர்ந்து விடும். செடிகளை ரூ. 60 முதல் ரூ. 200 வரை விற்பனை செய்கிறோம். தோட்டம் அமைப்பவர்களுக்கு சிறந்த ஆலோசனை வழங்கப்படும், என்றனர்.

**ஆடிப்பட்டம் விதை அறுவடைக்கு தயார் சாய்ந்து நிற்கும் நெல் நாற்று**

கல்லல்: ஆடிப்பட்டத்தில் புழுதி விதைப்பு மேற்கொண்ட நிலத்தில் நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் ஒரு போகம்

விளையும், மானாவாரி விவசாயமே மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு 90 ஆயிரம் எக்டேர் நெல் அறுவடை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை 70 ஆயிரம் எக்டேர் நடவு செய்யப்பட்டுள்ளது. நடவு முறையில் விவசாயம் மேற்கொள்வது, ஆடி பட்டத்தில் (ஆகஸ்டில்) புழுதிவாரியாக விதைத்து, உழவு மூலம் விளைச்சலை மேற்கொள்வது என இரண்டு முறையில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. புழுதிவாரியாக விதைப்பவர்களுக்கு மழை குறிப்பிட்ட படி அமைந்தால் டிசம்பர் இறுதியில் அறுவடை பணிகளை மேற்கொள்வார்கள். இந்த ஆண்டு ஓரளவு மழை பெய்துள்ளதால் ஆடி பட்டம் விதைத்த நெல்,அறுவடையை எதிர்நோக்கி உள்ளது. கல்லல் ஒன்றியத்தில் இந்த மாத கடைசியில் 750 ஏக்கர் வரை அறுவடை யாக உள்ளது. தை தொடக்கத்தில் ஆயிரம் ஏக்கர் அறுவடைக்கு தயாராக உள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விளைநிலங்களை பண்படுத்தும் பணியில் விவசாயிகள்**

ராஜபாளையம்;ராஜபாளையத்தில் தொடர்மழையால் நிலங்களை உழுது பண்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்.கடந்த ஆண்டு பருவமழை பெய்யாததால் ராஜபாளையத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. 28 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் சப்ளை நடந்தது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் வீடு மற்றும் விவசாய கிணறுகளில் தண்ணீர் குறைந்தது. மா, தென்னை உட்பட மற்ற பயிர்களை காப்பாற்ற, தண்ணீரை விலைக்கு வாங்கும் நிலை ஏற்பட்டது.

இரண்டாம் தேக்கம்:கடந்த இரு மாதமாக அடிக்கடி தொடர்மழை பெய்வதால் ராஜபாளையம் கோடை கால குடிநீர் தேக்கத்தில் போதுமான தண்ணீர் உள்ளது. பராமரிப்பில்லாத இரண்டாம் தேக்கத்திலும் தண்ணீர் சேமிக்கப்படுகிறது. இது தவிர மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த மழைநீர் மலையடிவாரத்தில் உள்ள அய்யனார்கோயில் ஆற்றில் வருகிறது.

ஏழு ஆண்டுகளுக்கு பின் தண்ணீர் இந்த தண்ணீர் முடங்கியார், மறிச்சுகட்டி ஆறுகள் மூலம் ராஜபாளையம் தாலுகா கண்மாய்களில் சேமிக்கப்படுகிறது. தென்காசி ரோடு முதல் கொல்லங்கொண்டான் வரை உள்ள பெரியகுளம் கண்மாயில் ஏழு ஆண்டுகளுக்கு பின் தற்போது தண்ணீர் உள்ளது.

இதனால் கண்மாய் மற்றும் கிணற்று பாசன விவசாயிகள் நடவு பணியை துவக்க உள்ளனர். அதற்கு முன் விளை நிலங்களை உழுது பண்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மழையால் புல், செடி :விவசாயிகள் கூறுகையில், "தற்போதைய மழை, மா, பலா, தென்னை தோப்பு விவசாயத்திற்கு நன்றாக இருக்கும். குறிப்பாக மாந்தோப்புகளில் சீசனின்போது நல்ல காய்ப்பு இருக்கும். தோப்புகளில் எள் போன்ற ஊடுபயிர்க்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம். ஏற்கனவே தரிசாக இருந்த நிலத்தில் மழையால் புல், செடி வளர்ந்து உள்ளது. இந்த நிலைத்தை உழுது, செடிகளை மக்கச்செய்து பண்படுத்தி விவசாய பணியை துவக்க உள்ளோம்' என்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## காடையாம்பட்டி பகுதியில் பூத்துக்குலுங்கும் சாமந்தி பூக்கள்



ஓமலூரை அடுத்த காடையாம்பட்டி ஒன்றியத்தில் பூசாரிப்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, தாராபுரம், கொங்குபட்டி, காருவள்ளி, மூக்கனூர்,குண்டுகல், டேனிஸ்பேட்டை, நடுப்பட்டி, கொங்காரப்பட்டி, கணவாய்புதூர் உள்பட ஊராட்சிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்களில் சாமந்தி, சாந்தினி, கோழிக்கொண்டை, நாட்டு சாமந்தி, வைலட், மஞ்சள் பூர்ணிமா, வெள்ளை பேப்பர் ஒயிட், ராஜமலர் ஆகிய பூக்கள் பயிர் செய்யப்பட்டு உள்ளது. கடந்த மாதங்களில் பெய்த பருவ மழையினால் சுமார் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட பூ வேர்கள் அழுகியது. இதனால் பூக்கள் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின்

பரப்பு குறைந்தது. ஆனால் தற்போது பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. மேலும் பூவுக்கு நல்ல விலை கிடைக்கின்றது. இவ்வாறு சாகுபடி செய்யப்பட்ட பூக்களை விவசாயிகள் பூசாரிபட்டி பூ மார்கெட்டுக்கும் சேலம் பூ மார்க்கெட்டுக்கும், பெங்களூருக்கும் அனுப்பி விற்பனை செய்து வருகின்றனர். பூசாரிபட்டி மார்க்கெட்டில் வாங்கப்படும் பூக்களை வியாபாரிகள் தஞ்சாவூர், பட்டுகோட்டை, கும்பகோணம், திருச்சி, கடலூர், சென்னை, மற்றும் பெங்களூரு போன்ற ஊர்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

## குண்டடம் பகுதி கிணறுகளில் நீர்மட்டம் உயராததால் விவசாயிகள் கவலை



குண்டடம் பகுதிகளில் பருவமழை போதுமான அளவு பெய்யாததால் கிணறுகளில் நீர்மட்டம் உயரவில்லை. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>பருவ மழை</u>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையால் பல்வேறு பகுதிகளில் அணைகள், குளங்கள் நிரம்பின. இதனால் கிணறுகளிலும் நீர்மட்டம் உயர்ந்தது. விவசாயிகள் சாகுபடியில் ஈடுபட தொடங்கினர்.

ஆனால் திருப்பூர் மாவட்டம் குண்டடம் சுற்று வட்டார பகுதிகளான பெல்லம்பட்டி, எடையப்பட்டி, தும்பலப்பட்டி, நந்தவனம்பாளையம், சங்கபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சாகுபடி செய்ய முடியவில்லை

இதுகுறித்து குண்டடம் அடுத்துள்ள தும்பலப்பட்டியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது:–

வடகிழக்கு பருவமழை மற்றும் பி.ஏ.பி. பாசன தண்ணீரை நம்பி தான் இந்த பகுதிகளின் விவசாயம் நடைபெறுகிறது. கடந்த 15 வருடங்களுக்கு முன்பு வரை பருவமழையும் சீராக பெய்து வந்தது. பி.ஏ.பி. தண்ணீரும் போதிய அளவில் கிடைத்தது. இதனால் விவசாய பணிகள் தடையின்றி நடைபெற்றது. ஆனால் தற்போது பருவமழை போதிய அளவுக்கு பெய்யவில்லை. பி.ஏ.பி. பாசன தண்ணீரும் கடைமடை வரை வருவதில்லை. இதனால் விவசாய கிணறுகளில் நீர்மட்டம் உயரவில்லை. இதன் காரணமாக விவசாயிகள் எந்தவித சாகுபடியும் செய்யமுடிய வில்லை. இதனால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டு, பலர் மாற்று தொழிலுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு சிலர் விவசாய நிலங்களை விற்றுவிட்டனர். எனவே கார்மழை கைகொடுத்தால் தான் இப்பகுதியில் விவசாயம் செய்யமுடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## குமரி மாவட்டத்தில் சாரல் மழை பாலமோர் பகுதியில் 13.4 மி.மீ. பதிவு



குமரி மாவட்டத்தில் நேற்று சாரல் மழை பெய்தது. பாலமோர் பகுதியில் 13.4 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

சாரல் மழை குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மழை ஓய்ந்திருந்தது. இந்தநிலையில் நேற்று அதிகாலை 5.30 மணியில் இருந்து காலை 7.30 மணி வரை நாகர்கோவிலில் சாரல் மழை பெய்தது. இந்த மழை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்திருந்தது. குறிப்பாக நாகர்கோவில் சுற்றுவட்டாரப் பகுதிகள், குலசேகரம், திருவட்டார், மார்த்தாண்டம், குழித்துறை, ஆற்றூர், களியக்காவிளை, அருமனை உள்பட பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பெய்தது.

இதனால் நேற்று காலையில் இருந்து மதியம் வரை நாகர்கோவிலில் வானம் மேகமூட்டத்துடனும், ஜில்லென்ற சீதோஷ்ண நிலையுடனும் காணப்பட்டது. மதியத்துக்குப்பிறகு வெயில் இருந்தது.

மழைஅளவு

நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் கன்னிமார் பகுதியில் 1.2 மி.மீ. மழையும், பாலமோர் பகுதியில் 13.4 மி.மீ. மழையும், மயிலாடி பகுதியில் 2.2 மி.மீ. மழையும், கொட்டாரம் பகுதியில் 5.2 மி.மீ. மழையும் பதிவாகியிருந்தது. இதில் அதிகபட்சமாக பாலமோர் பகுதியில் 13.4 மி.மீ. மழை பதிவானது. 708 கன அடி திறப்பு நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 261 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து பாசனத்துக்காக 408 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் 45.93 அடியாக உள்ளது. பெருஞ்சாணி அணைக்கு 112 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 100 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணை நீர்மட்டம் 74.59 அடியாக உள்ளது. சிற்றார்–1 அணைக்கு 151 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 16.33 அடியாக உள்ளது. பொய்கை அணைக்கு 7.5 கன அடி தண்ணீர் வருகிறது. அணையின் நீர்மட்டம் 29.60 அடியாக உள்ளது. மாம்பழத்துறையாறு அணைக்கு 1 கன அடி தண்ணீர் வருகிறது. அணை நிரம்பியிருப்பதால் அந்த தண்ணீர் உபரியாக வெளியேற்றப்படுகிறது. பாசனத்துக்காக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார்–1 அணைகளில் இருந்து 708 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

## கோவையில் கறிக்கோழி இறைச்சி விலை உயர்வு கிலோ ரூ.190–க்கு விற்பனை



கோவை,

கோவையில் கறிக்கோழி இறைச்சி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தற்போது கிலோ ரூ.190–க்கு விற்பனையாகிறது.

<u>கோழி இறைச்சி</u>

கோவை மாவட்டத்தின் புறநகர் பகுதிகளில் ஏராளமான கோழிப்பண்ணைகள் உள்ளன. அங்கு உற்பத்தி செய்யப்படும் கறிக்கோழிகள், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகின்றன. இதேபோல் பல்லடத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கறிக்கோழிகள் கோவைக்கு கொண்டுவரப்படுகின்றன.

கோவை மாவட்டத்தில் உள்ள கோழி இறைச்சி கடைகள் மூலமாக பொதுமக்களுக்கும், ஓட்டல்களுக்கும், மொத்தமாகவும், சில்லரையாகவும், கோழி இறைச்சி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம்

கோவை மாவட்டத்தின் கோழி இறைச்சி தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

விலை உயர்வு

கடந்த வாரம் வரை கறிக்கோழி இறைச்சி கிலோ ரூ.140 முதல் ரூ.160 வரை விற்கப்பட்டது. இந்தவாரம் திடீரென்று கிலோ ரூ.180 முதல் ரூ.190 வரை விற்கப்படுகிறது. இதன்மூலம் கறிக்கோழி இறைச்சி விலை கிலோவுக்கு ரூ.50 வரை அதிகரித்து உள்ளது. எலும்பு நீக்கப்பட்ட (போன்லெஸ்), கறிக்கோழி இறைச்சி கிலோ ரூ.300–க்கு விற்பனையாகிறது.

இது தொடர்பாக இறைச்சி வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

கறிக்கோழி இறைச்சி விலை சரிந்து காணப்பட்ட நிலையில், இந்த வாரம் சற்று விலை உயர்ந்துள்ளது. தேவை அதிகரித்து உள்ளதால் இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு புத்தாண்டு வரை நீடிக்கும் என்று தெரிகிறது. அதற்கு பிறகு விலை படிப்படியாக குறைய தொடங்கிவிடும்.

நாட்டுக்கோழி இறைச்சி

நாட்டுக்கோழி இறைச்சியை பொறுத்தவரை முதல் ரகம் கிலோ ரூ.350–க்கு விற்பனையாகிறது. 2–வது ரகம் கிலோ ரூ.250–க்கு விற்பனையாகிறது. நாட்டுக்கோழி இறைச்சி விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏதும் இல்லை. வரத்து மற்றும் விற்பனை எப்போதும் போலவே உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தென்மாவட்ட கடலோர பகுதிகளில் இன்று மழை பெய்யும் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு




சென்னை,

இலங்கை அருகே உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

பருவகாலம்

தமிழ்நாட்டில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய 4 மாதங்கள் தென் மேற்கு பருவமழை காலம். இந்த காலத்தில் தமிழகத்திற்கு ஒரு ஆண்டுக்கு பெய்ய வேண்டிய சராசரி அளவில் குறைந்தஅளவு மழை தான் கிடைக்கும். ஆனால் வடகிழக்கு பருவமழை காலம்தான் அதிக மழையை கொடுக்கக் கூடியது. வடகிழக்கு பருவமழை கணக்கிடும் காலம் அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந்தேதி வரையாகும். ஆனால் இந்த வருடம் அக்டோபர் 20-ந்தேதிக்கு முன்பே வடகிழக்கு

பருவமழை தொடங்கிவிட்டது. கூடுதல் மழை இந்த பருவமழை காலத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் ஒரே நாளில் மிக கனமழை பெய்தது. அதன் காரணமாக வெள்ளச்சேதம் பெரிய அளவில் ஏற்பட்டது. கோவை, திண்டுக்கல், நாமக்கல், தேனி, திருச்சி, கரூர், ராமநாதபுரம், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் சராசரி மழை பெய்துள்ளது. மீதம் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக மழை பெய்து இருக்கிறது. புதுச்சேரியிலும் கூடுதலாக மழை பெய்து இருக்கிறது. 54 சதவீதம் கூடுதல் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் நேற்று வரை, சராசரியை விட கூடுதலாக 54 சதவீதம் மழை பெய்துள்ளது.

வருகிற 31-ந்தேதியுடன் வடகிழக்கு பருவமழை காலம் முடிவடைகிறது. ஜனவரி 1-ந்தேதி முதல் பிப்ரவரி இறுதிவரை பெய்யக்கூடியது குளிர்கால மழையாகும். பின்னர் மார்ச் மாதம் முதல் மே மாதம் முடிய கோடை காலம் ஆகும். இன்றைய வானிலை குறித்து நேற்று சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:- இன்று அநேக இடங்களில் மழை தென்மேற்கு வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து இலங்கை அருகே உள்ளது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் சில இடங்களில் மழைபெய்துள்ளது. இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை வலுவடைய வாய்ப்பு இல்லை. நாளை முதல் மழையின் அளவு குறையும். இன்று (செவ்வாய்க்கிழமை) தென் மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளில் அநேக இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்பு உள்ளது. இதர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழைபெய்யும். நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

ராமேசுவரம் 7 செ.மீ., பாம்பன் 6 செ.மீ., தங்கச்சிமடம் 5 செ.மீ., ராமநாதபுரம், மண்டபம் தலா 4 செ.மீ., ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி தலா 3 செ.மீ., பாபநாசம் 2 செ.மீ., கடலாடி, திருச்செந்தூர், சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம் தலா 1 செ.மீ. மழை பெய்துள்ளது. இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோட்டூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு பண்ணைபள்ளி பயிற்சி வகுப்பு**

திருவிடைமருதூர், : திருவிடைமருதூர் கோட்டூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு நடந்த பண்ணைபள்ளி வகுப்பு பயிற்சியில் வயலில் நேரடி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண்மைதுறையின் அட்மா திட்டத்தின்கீழ் திருவிடைமருதூர் தாலுகா திருப்பனந்தாள் வட்டாரம் கோட்டூர் கிராமத்தில் விவசாயிகளுக்கான பண்ணை பள்ளி 5ம் வகுப்பு நேற்று நடைபெற்றது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து வயல்களில் பறவை குடில் அமைக்கும் முறைகள் மற்றும் அதன் பயன்கள் குறித்து தொழில்நுட்ப உரையாற்றினார். அட்மா திட்ட தலைவர் மனோகரன் முன்னிலை வகித்தார். ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஓய்வுபெற்ற வேளா ண்மை இணை இயக்குனர் ஜோதி, நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த எலி மேலாண்மை மற்றும் இயற்கை பூச்சி கொல்லிகள் தயாரித்தல் மற்றும் அதனை கையாளும் முறைகள் குறித்த தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப நுட்ப மேலாளர் பிரகாஷ் விவசாயிகளை

குழுக்களாக பிரித்து வயல் சூழல்ஆய்வு மேற்கொண்டார். இதில் வரப்புகளின் எலி வகைகளை கண்டறிதல், உயிரினங்களில் நன்மை தீமை பூச்சிகளை பார்த்து அவைகளின் எண்ணிக்கையை தெரிந்து கொள்ளுதல் மற்றும் பயிர்களின் வளர்ச்சி, காற்றின் திசை, நீர் நிலை கண்டறிதல் போன்றவற்றை தெரிந்து கொள்ள வயலுக்கு விவசாயிகளை அழைத்து சென்று செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. பின்னர் விவசாயிகள் வயல்சூழல் ஆய்வு செய்ததை படம் வரைந்து விளக்கினர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் செந்தில், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சங்கீதா சிவகுருநாதன் உள்ளிட்டோர் ஏற்பாடு செய்திருந்தனர். வேளாண்மை உதவி அலுவலர் தியாகராஜன் நன்றி கூறினர்.

**நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி**

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டாரம் காரியாவிடுதி கிராமத்தில் வேளாண்மைத்துறை மூலம் அட்மா விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்கீழ் நெல் சாகுபடி செய்யும் 25 விவசாயிகளுக்கு நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து நடைபெற்று வரும் பண்ணைப்பள்ளி பயிற்சியை தஞ்சை வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டங்கள்) சீனிவாசன் ஆய்வு செய்தார். அப்போது விவசாயிகளுக்கு நெல் சாகுபடியில் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்தும் உயிரியல் முறையான பூச்சிகளை கவரக்கூடிய மஞ்சள் நிற மலர்களை தோற்றுவிக்கும் செடிகளான செண்டிப்பூ, சூரியகாந்தி, வெண்டை, உளுந்து, தட்டைப்பயிறு, எள் போன்ற பயிர்களை வரப்புகளில் நடவு செய்யும் முறைகள் பற்றி எடுத்துரைத்து நெற்பயிரில் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்தவும், உபரி வருமானம் பெறவும் ஆலோசனை வழங்கினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு செண்டிப்பூ கன்றுகள், வெண்டை மற்றும் சூரியகாந்தி விதைகளை இலவசமாக வழங்கினார். மேலும் நெற்பயிரில் வேர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து வேர்கள் மூலம்

மண்ணில் உள்ள ஊட்டச்சத்துக்களை பயிருக்கு கொடுக்கும் திறன் கொண்ட வேம் மைக்கோரைசா பூஞ்சாணத்தின் செயல்பாட்டினையும், அதனை பயன்படுத்தும் முறைகள் பற்றியும் விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில் செயல்விளக்கம் மூலம் செய்து காண்பித்தார். அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் உரம் மற்றும் சூடோமோனாஸ் உயிர் பூசனக்கொல்லி பயன்படுத்தும் முறைகள் பற்றியும் செயல்விளக்கம் செய்து காட்டினார். பண்ணைப் பள்ளியில் திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன், வேளாண்மை அலுவலர் முருகேசன், உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் ஆகியோர் தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தனர். அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் மேனகா, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் ரெத்தினம், நெடுஞ்செழியன் ஆகியோர் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**ரசாயன உரங்களை பயன்படுத்தினால் மண்வளம் குறையும் வேளாண் இணை இயக்குனர் பேச்சு**

கம்பம். : கம்பம் வட்டாரத்தில் விவசாயிகள் தினவிழா வேளாண்துறை சார்பாக நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு தேனி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் வெங்கடசுப்ரமணியன் தலைமை தாங்கினார். கம்பம் வேளாண் உதவி இயக்குநர் அசோகன் முன்னிலை வகித்தார்.வெங்கடசுப்ரமணியன் பேசுகையில், 'தேனி மாவட்டத்தில் 12 ஆயிரம் மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மண்ணில் இயற்கை நுண்ணுயிரிகள் பல உள்ளன. ரசாயன உரங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட பூச்சிகொல்லி மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்துவதால் நுண்ணுயிரிகளின் பெருக்கம் வெகுவாக பாதிக்கப்பட்டு மண்வளம் குறைய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் உரப்பயன்பாட்டை மண்பரிசோதனை மூலம் அறிந்துகொண்டு செயல்படுத்தவேண்டும்.

தழைச்சத்தினை குறைவாக பயன்படுத்தல்

மற்றும் வேப்பம் பிண்ணாக்கினை கலந்து பயன்படுத்துவதால் பூச்சிநோய் தாக்குதல் குறையும். பரிந்துரை செய்யப்பட்ட பூச்சிமருந்துகளை மட்டும் குறிப்பிட்ட அளவில் மட்டும் பயன்படுத்த வேண்டும். மேலும் விவசாயிகள் எளிய முறைகளில் இயற்கை உரங்களை தங்கள் பண்ணைகளில் கிடைக்கும் வேப்பந்தழை, காட்டாமணக்கு, புங்கைஇலை, ஊமத்தை இலை மற்றும் எருக்கு இலையினை பயன்படுத்தி இயற்கை பூச்சிவிரட்டி தயாரித்து உபயோகிக்கலாம். உயிரியல் கட்டுப்பாடு முறைகளான இனக்கவர்ச்சிப்பொறி மற்றும் இயற்கை முட்டை ஒட்டுண்ணி ஆகியவற்றை பயன்படுத்தி தரமான உணவு தானியங்களை உற்பத்தி செய்து, வளமான தலைமுறையை உருவாக்க உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு பேசினார்.

**பயிரில் நோய் தாக்குதலை இயற்கை முறையில் எளிதில் கட்டுப்படுத்தலாம் வேளாண்துறை ஆலோசனை**

சிவகங்கை, : தேவகோட்டை அருகே கண்ணங்குடி வட்டாரத்தில் 7ஆயிரத்து 240 ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது இப்பயிர்களில் குலைநோய் மற்றும் பாக்டீரியா இலைக்கருகல் நோய் தாக்குதல் உள்ளன. பெரும்பாலான விவசாயிகள் இதனை நோய் என்று அறியாமல் பூச்சியால் வந்த சேதமென்று எண்ணி பூச்சிமருந்துகளைதெளிக்கின்றனர்.

இந்நிலையில் நோய்கள் அதிக அளவில் தென்பட்ட கப்பலூரில் விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் சுப்புலெட்சுமி தலைமை வகித்தார். குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய வேளாண் விஞ்ஞானிகள் செல்வராஜ், சீனிவாசன் ஆகியோர் விவசாயிகளிடம் பேசியதாவது, ‘‘குலைநோய் வராமல் தடுக்க சூடோமோனாஸ் என்ற நன்மை செய்யும் பாக்டீரியாவை 1 கிலோ விதைக்கு 10 கிராம் என்ற வீதத்தில் கலந்து விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். விதைப்பதற்கு முன் அல்லது

கடைசி உழவிற்கு முன் 2 கிலோ சூடோமோனாஸை 50 கிலோ மக்கிய குப்பையுடன் கலந்து ஒரு ஏக்கார் நிலத்தில் இடுவதால் குலைநோயை உருவாக்கும் பூஞ்சாணம் ஆரம்ப நிலையிலேயே அழிக்கப்பட்டுவிடும். குலைநோய் வந்தபின் 1 லிட்டர் நீரில் 2 கிராம் சூடோமோனாஸ் கலந்து பயிரில் தெளித்து கட்டுப்படுத்தலாம். அல்லது 1 லிட்டர் நீரில் 1 கிராம் ட்ரைசைக்ளோசோல் மருந்தினை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். நெற்பயிரில் வரக்கூடிய நோய்களின் அறிகுறிகளை விளக்கி இயற்கை முறையிலும் கட்டுப்படுத்தலாம். 30எலுமிச்சை சாற்றுடன் 15 முட்டைகளை ஒரு பாத்திரத்திலிட்டு மூடி 15முதல் 20 நாட்கள் வரை வைத்திருந்து பின் 500 கிராம் வெல்லம் கலந்து மீண்டும் 5 நாட்கள் வைத்திருக்க வேண்டும். இக்கலவையை நன்கு கலக்கி 1:10 என்ற விகிதத்தில் தண்ணீர் சேர்த்து பயிருக்கு தெளித்து அனைத்து பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு பேசினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள், வேளாண் உதவி அலுவலர்கள் உள்பட பலர் கலந்துகொண்ட

னர்.

**வெளுத்துக்கட்டிய மழையால் செண்பகத்தோப்பு பகுதியில் காய்த்து குலுங்கும் ஆரஞ்சு**

திருவில்லிபுத்தூர், : திருவில்லிபுத்தூர் அருகே செண்பகத்தோப்பு பகுதியில் பருவமழை வெளுத்துக்கட்டியதால் மலை ஆரஞ்சு, மலை மாதுளை காய்த்துக் குலுங்குகின்றன.திருவில்லிபுத்தூர் அருகேயுள்ள மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி அடிவாரமான செண்பகத்தோப்பு பகுதியில் நூறாண்டுகளைக் கடந்த மரங்களும், பல்வேறு மூலிகைச்செடிகளும் உள்ளன. இப்பகுதியின் குறிப்பிட்ட சில இடங்களில் அரிய வகை மரங்களும் உள்ளன. கடந்த சில ஆண்டுகளில் இல்லாத வகையில், இந்த ஆண்டு வட கிழக்குப் பருவமழை வெளுத்துக்கட்டியது. இதனால், பசுமையான போர்வையை விரித்தது

போன்ற அப்பகுதி காட்சியளிக்கிறது. இந்நிலையில், ேமற்குத்தொடர்ச்சி மலையின் உச்சிப்பகுதியில் ஏராளமான மலை ஆரஞ்சுகள் காய்த்துக் குலுங்குகின்றன. இதை கடந்த சில நாட்களுக்கு முன் அப்பகுதியில் ரோந்து சென்ற வனத்துறையினர் உறுதி செய்தனர். குறிப்பாக முதலியார் ஊத்துப்பகுதியில் ஏராளமான மரங்களில் மலை ஆரஞ்சுகள் காய்த்துக் குலுங்குகின்றன. இதைப்பார்த்து வனத்துறையினர், மலைவாழ்மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மலை உச்சிப்பகுதியில் ஆரஞ்சு காய்த்துள்ளதால் கருமந்தி, வெள்ளைமந்தி உள்ளிட்ட விலங்குகள் மற்றும் பறவைகள் ஆரஞ்சை ருசி பார்க்கின்றன. இதுகுறித்து மலைவாழ்மக்கள் சிலர் கூறும்போது, “இந்த ஆண்டு பருவமழை அதிக அளவு பெய்தது. ஒவ்வொரு ஆண்டும் காய்க்கும் பழங்களைவிட இந்த ஆண்டு மலை ஆரஞ்சு அதிகளவு காய்த்து குலுங்குவது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. மலை ஆரஞ்சோடு ஒரு சில இடங்களில் மலை மாதுளைகளும் அதிகளவு காய்த்துள்ளன என்றனர்.